## கமநல அபிவிருத்தி நிதியம் - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களிலான மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இகநி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய வருடங்களின் தவறுகள், அவை கண்டறியப்பட்டதன் பின்னர் வெளியிடப்படும் நிதிக்கூற்றுக்களில் பின்னோக்கி | 2020 பேரேட்டுக் கணக்கில் பொதுப் பேரேட்டின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த பதிவுகள் அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் தொகுதியில் பதிவு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திருத்தம் செய்யப்பட்டு ஒப்பிடக்கூடிய பெறுமதிகளை மீள திருத்தியமைத்து, அந்த தவறுகளின் தன்மை மற்றும் சீராக்கம் செய்யப்பட்ட முறைமை தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கடந்த வருடத்திற்கு உரியதாக மீளாய்வாண்டின் போது ரூபா 17,178,685 ஆன நிதிக்கூற்றுக்களின் தவறுகள் திருத்தப்பட்டு, மீள பதியப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செய்யப்படாமையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்க நடவடிக்கை எடுக்கின்றேன். | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் அனுமதிப்பத்திர வருமானத்தில் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய 40 சதவீதமான அளவானது ரூபா 5,306,044 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றின் அனுமதிப்பத்திர வருமானமாக ரூபா 2,533,691 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமானம் ரூபா 2,772,353 இனால் குறைத்தும் பெற வேண்டிய அனுமதிப்பத்திர வருமானக் கணக்குகள் அந்த அளவினால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அதற்குரிய சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதியத்திற்குரிய அனுமதிப்பத்திர வருமானம் உரிய முறையில் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) கமநல அபிவிருத்தி நிலையங்களிலிருந்து 2017ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரையிலும் அறவிடப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணங்களின் கமநல அபிவிருத்தித் நிதியத்திற்கு பெற்றுக்கொள்ள வேண்டிய 40 சதவீதமான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 | தகவல் கிடைத்தவுடன் கணக்கு அறிக்கைகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதியத்திற்குரிய அனுமதிப்பத்திர வருமானம் உரிய முறையில் இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 56 கமநல அபிவிருத்தி திணைக்களங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 11,553,621 ஆன தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கடந்த வருடங்களுக்குரியதாக கிடைத்திருந்த ‘‘கொவிமிண’’ சஞ்சிகையின் விற்பனை வருமானமான ரூபா 22,800 தொகை, உரித்து கோரப்படாத காணிகளின் பிரவேசக் கட்டணமான ரூபா 301,943 தொகை, விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட 02 சக்கர உழவு இயந்திரங்களின் கடன் தவணைப் பணமான ரூபா 7,641,488 தொகை மற்றும் கமநல அபிவிருத்தி நிலையங்களிலிருந்து அறவிடப்பட்ட 04 சக்கர உழவு இயந்திரங்களின் கடன் தவணைப் பணமான ரூபா 50,000 தொகையுமாக ரூபா 8,016,231 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடங்களில் சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | ஒவ்வொரு வருடங்களுக்கும் உரிய வருமானங்கள் உரிய முறையில் இனங்காணப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 02 சக்கர உழவு இயந்திர கடன் கொடுத்தோர் ரூபா 2,551,196 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த விடயம் மீளாய்வாண்டின் போதும் திருத்தப்படாத காரணத்தால் 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக 02 சக்கர உழவு இயந்திர கடன் பட்டோர் மற்றும் தீர்வையாகாத 02 சக்கர உழவு இயந்திர தவணை வைப்புக்கள் கணக்குகள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான தகவல்கள் கிடைத்தவுடன் கணக்கு அறிக்கைகளில் சீராக்குவதற்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | கணக்கீட்டுக் குறைபாடுகள் திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான 04 சக்கர் உழவு இயந்திர நிலுவைக் கடன் பட்டோர் மீதி ரூபா 19,632,600 ஆக காணப்பட வேண்டிய போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,305,000 ஆக காண்பிக்கப்பட்ட காரணத்தால் கடன் பட்டோர் மீதி மற்றும் தீர்வையாகாத 04 சக்கர உழவு இயந்திரங்களின் தவணைகள் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 8,327,600 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உரிய மீதிகளை சரியாக பெற்றுக்கொள்வதற்காக முழுமையான விசாரணையொன்று தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிடப்பட வேண்டிய மீதிகள் சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2019ஆம் ஆண்டுக்குரியதாக கிடைத்த 20 சதவீதமான ஏக்கர் வரிப் பங்களிப்பான ரூபா 188,785 தொகை ஆண்டுக்குரிய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏக்கர் வரி வருமானம் மற்றும் பெற வேண்டிய ஏக்கர் வரி வருமானம் அகியன கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன. | 2021ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | ஒவ்வொரு வருடங்களுக்குரிய வருமானங்கள் உரிய முறையில் இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

**கணக்காய்வு அவதானிப்புகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் புத்தகங்களின் பிரகாரம், வைப்புக் கணக்கின் மீதி ரூபா 259,321,334 ஆன போதிலும், திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 259,973,482 ஆகும். அதன் பிரகாரம், ரூபா 652,148 ஆன வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 651,797 ஆன வேறுபாடு தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் அந்த வேறுபாடு நிலவிய காலப்பகுதியில் நிதியத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் ஒவ்வொன்றாக ஆராயப்பட்டு வேறுபாட்டுக்கு தாக்கமளித்த கொடுக்கல் வாங்கல்கள் இனங்காணப்பட்டு | வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திருத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது என்பதை முன்மொழிகின்றேன். | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றில் 02 சக்கர உழவு இயந்திர கடன் பட்டோராக ரூபா 124,864,467 ஆக காண்பிக்கப்பட்டுள்ள போதிலும், சேவைப் பிரிவினால் வழங்கப்பட்ட அறிக்கையில் அந்த பெறுமதி ரூபா 124,088,017 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 776,450 ஆன இணங்காத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | ஆணையாளர் (சேவைகள்) இனால் சரியான அறிக்கையொன்று வழங்கப்பட்டதன் பினரன் அந்த அறிக்கையையும் ஆராய்ந்து 2021ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைெ தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களின் மீதிகள் குறித்த பிரிவுகளின் பட்டோலைகளுடன் இணங்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31ஆந் திகதியளவில் 04 சக்கர உழவு இயந்திர கடன் ரூபா 19,632,600 நிலுவையாக காணப்பட்டதுடன், குறித்த பணத்தை உரிய கமநல மத்திய நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

### 1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2011 இன் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 இன் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 56(1) உப பிரிவு | ஒவ்வொரு வருடத்தினதும் ஏக்கர் வரியினை அறவீடு செய்யும் பணிகள் குறித்த வருடத்தின் மார்ச் 31ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த பணி கடந்த வருடங்களில் மற்றும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக கமநல | 2020ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரி அறவிடலை மிகவும் செயற்திறனாக மேற்கொள்வதற்காக 2020 பெப்ரவரி 24ஆந் திகதி முதல் 2020 மார்ச் 01ஆந் திகதி வரையிலுமான வாரத்தினை ஏக்கர் வரி வாரமாக நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், நாட்டில் நிலவிய கொவிட்-19 நிலைமையின் மத்தியில் ஏக்கர் வரி | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் நிலையத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 20,990,383 ஆன ஏக்கர் வரி தொகையொன்று காணப்பட்டது. | சேகரிப்பு பணிகளில் தடைகள் ஏற்பட்டிருந்ததுடன், நிலுவைப் பணத்தினை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | |
| (ஆ) 2015 யூலை 14ஆந் திகதிய 3/2015ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | முற்பணங்களை தீர்ப்பனவு செய்தல் வழங்கப்பட்ட வருடத்திலேயே திசெம்பர் 31ஆந் திகதிக்கு முன்னர் மிகவும் தாமதிக்காது தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மாவட்ட அலுவலகத்திற்கு நிர்மாணங்கள் மற்றும் கொள்வனவுகளுக்காக கடந்த வருடத்தில் வழங்கப்பட்ட ரூபா 6,610,000 தொகையான முற்பண மீதியொன்ற கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 08ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட அலுவலகத்திற்கு நிர்மாணங்கள் மற்றும் கொள்வனவுகளுக்காக கடந்த வருடத்தில் வழங்கப்பட்ட முற்பணங்களை தீர்ப்பனவு செய்யுமாறு உரிய பிரதி/உதவி ஆணையாளர்களுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், குறித்த முற்பணங்களை தீர்ப்பதற்குரிய சில கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்குகள் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக மீண்டும் உரிய மாவட்ட அலுவலகங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டதுடன், 2021ஆம் ஆண்டினுள் அந்த முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | செயல்நிமித்த உப கட்டுநிதியை தாமதமின்றி தீர்ப்பனவு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2015 யூலை 14ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) | பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி குறித்த பணி நிறைவடைந்ததும் 10 நாட்களினுள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 16,711,653 ஆன முற்பண மீதியொன்று 2021 மார்ச் 08 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டின் போது கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக சுமார் 03 மாத காலமாக நாடு மூடப்பட்டிருந்தமையால் முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் மதிப்பீடுகளை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டமையால் நிர்மாணப் பணிகளுக்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட முற்பணங்களில் சில முற்பணங்கள் மாவட்டங்களுக்கு 2020ஆம் ஆண்டின் இறுதி 03 மாதங்களினுள் | செயல்நிமித்த உப கட்டுநிதியை தாமதமின்றி தீர்ப்பனவு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

அனுப்பப்பட்டுள்ளதுடன், அந்த பணிகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, கொவிட் - 19 நிலைமையின் அடிப்படையில் அரசினால் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கமைய உத்தியோகத்தர்களை சேகரிக்கும் பணிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்டமையால் முற்பணங்களை தீர்ப்பனவு செய்யும் பணிகள் தாமதமாகியிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 22,035,319 ஆன மிகையாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 3,793,421 ஆகும். அதன் பிரகாரம், செயற்பாட்டு விளைவுகளில் ரூபா 25,828,740 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வழங்கள் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 10,102,210 இனால் குறைவடைந்தமை, உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் செலவினம் ரூபா 15,057,824 இனால் குறைவடைந்தமை, கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 4,429,141 இனால் குறைவடைந்தமை ஆகியன பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் 20 சதவீத ஏக்கர் வரி வருமானம் 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், ஜல தாரா கையேடு, வடைபடங்கள் மற்றும் பயிர்ச்செய்கை போகங்களின் கையேடுகளின் விற்பனை வருமானம், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் நிலமீட்டல் வருமானம், ஏனைய பெறுவனவுகள:, 02 சக்கர உழவு இயந்திர வருமானம் மற்றும் பட்டியல் புத்தகங்களின் விற்பனை வருமானம் ஆகியன முறையே 99, 62, 54, 44 மற்றும் 35 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே வழங்கல் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திச் செலவினம், பொதுச் செலவினம், கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினம் மற்றும் உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் செலவினம் ஆகியன முறையே 100, 83, 69 மற்றும் 56 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், கமநல மத்திய நிலைய நிர்வாக மற்றும் அபிவிருத்தி செலவினம் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு முறையே 11563 மற்றும் 47 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் வருமான மிகை விகிதம் 44 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன், நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் ஆகியன முறையே 0.16 சதவீதம் மல்றும் 0.15 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் 03 சந்தர்ப்பங்களில் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கை நடாத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,248,280 ஆன முற்பணத் தொகை குறித்த பணிக்காக பயன்படுத்தாது 106 நாட்களின் பின்னர் நிதியத்திற்கு மீளக் கட்டப்பட்டிருந்தது. | நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலமையின் அடிப்படையில் அரசாங்கத்தினால் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கமைய உத்தியோகத்தர்கள் கூடும் பணிகள் மற்றும் வருகை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால், கண்டி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்ட அலுவலகங்களினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிராமையால் முற்பணத்தினை பெற்றுக்கொண்ட போதிலும், பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்படாமையால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணம் மீள கட்டப்பட்டிருந்தது. | செயல்நிமித்த உப கட்டுநிதியை தாமதமின்றி தீர்ப்பனவு செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) வயல் காணியல்ல எனும் சான்றிதழை வழங்குதல் மற்றும் வயல் நிலமொன்றினை வேறு பணியொன்றுக்காக ஈடுபடுத்த சான்றிதழ் வழங்குதல் ஆகியவற்றுக்காக 02 விண்ணப்பதாரிகளிடமிருந்து 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,075,200 பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2021 மார்ச் 24ஆந் திகதி வரையிலும் விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 7/11/9/CO/2650 ஆம் இலக்க கோவைக்கு உரியதாக 2018 பெப்ரவரி 12ஆந் திகதிய ரூபா 912,000 ஆன தொகை சேவைக் கட்டணமொன்றாக அறவிடப்பட்டுள்ளதுடன், கோவையின் பரிந்துரைகள் 08 வருடங்களுக்கு மேல் பழமையானது என்பதால் மற்றும் 7/11/3/CO/1058 ஆம் இலக்க கோவைக்கு உரியதாக 2018 பெப்ரவரி 16ஆந் திகதிய ரூபா 163,200 ஆன தொகை சேவைக் கட்டணமொன்றாக அறவிடப்பட்டுள்ளதுடன், கோவையின் பரிந்துரைகள் 03 வருடங்களுக்கு மேல் பழமையானது என்பதாலும், அனுமதிப்பத்திரத்தினை வழங்க வேண்டிய திகதியளவில் மேல் மாகாணத்தின் வயல் | பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பணிகளுக்காக தாமதமின்றி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அல்லாத போது பணம் மீளச் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலங்கள் வேறு பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு உரிய அங்கீகாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |
| (இ) | 2006ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையிலும், கடன் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட 02 சக்கர உழவு இயந்திரங்களிலிருந்து தவணைகளை செலுத்தி நிறைவு செய்யப்பட்ட 705 உழவு இயந்திரங்கள் 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் விவசாயிகளுக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | கடன் தவணையை செலுத்தி நிறைவு செய்த விவசாயிகளுக்கு சொத்துக்கள் கையளிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31ஆந் திகதி நிதிக்கூற்றுக்களினுள் இதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 450,000 ஆன இருப்பு பற்றாக்குறை தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுவினால் அது தொடர்பில் தீர்மானமொன்று வழங்கப்படடாமையால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் இதனுடன் தொடர்புடைய குழுவிடம் விசாரணையொன்றினை மேற்கொள்ளல் பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது தொடரிப்ல ஒழுக்காற்று குழுவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் விசாரணைகளை துரிதமாக நிறைவு செய்து இடம்பெற்ற நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொவிஜன அஹிமன் நிகழ்ச்சித்திட்டமொன்றினை நடாத்தல் நிதியத்தின் பணியொன்றல்லாத போதிலும், 2019ஆம் ஆண்டின் போது | 2018ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த இந்த கொவிஜன அஹிமன் நிகழ்ச்சித்திட்டம் அதிமேதகு சனாதிபதி | அதிகாரச்சட்டத்தின நோக்கங்களுக்காக மாத்திரம் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொவிஜன அஹிமன் நிகழ்ச்சித்திட்டத்தின் பட்டியல்களை தீர்ப்பதற்காக 2020ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 200,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 650,000 தொகை அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | அவர்களின் அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாட்டுடன் நடாத்தப்பட்டது.<br><br>2020ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பொதுத் தேர்தல் மற்றும் நாட்டின் நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலமை காரணமாக குறித்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்தும் நடாத்திச் செல்லப்படவில்லை.<br><br>2020ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையில் 2019ஆம் ஆண்டுக்கான “கொவிஜன அஹிமன் - 2018” இற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்காக வழங்கப்பட்ட முற்பணத்தை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. | |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடங்களில் நிதியத்தின் செயற்பணி மற்றும் பணிகளான விவசாய ஆராய்ச்சிப் பணிகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. | விவசாய ஆராய்ச்சிப் பணிகளுக்காக மனிதவளம் எம்மிடம் காணப்பட்டாமையால் எதிர்வரும் வருடங்களில் அது தொடரில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | அதிகாரச்சட்டத்தின் செயற்பணி மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | விவசாய வங்கிகளுக்கு அலுவலக உபகரணங்கள, பாதுகாப்பு பெட்டகங்கள் மற்றும் மென்பொருள் கட்டமைப்பொன்றினை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் செயல்நடடிக்கைத் திட்டத்தினூடாக ரூபா 6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டின் போது அந்த பணி இடம்பெற்றிருக்கவில்லை. | 2020ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக கடமைகளில் ஏற்பட்ட கணிசமான குறைவு, உத்தியோகத்தர்களுக்கு சுழற்சி அடிப்படையில் கடமைகளை நிறைவேற்ற வேண்டியருந்தமையும், அவசர மற்றும் மிகவும் அத்தியாவசியமான கடமைகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கப்பட்டமையாலும் குறித்த பணியை நிறைவேற்ற முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட பணிகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டினுள் நிதியத்தின் புதிய விவசாய கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், வழங்கல்களை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், கமநல சேவை நிலையங்களில் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இனங்காணப்பட்ட கைவிடப்பட்ட வயல்களை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தல் ஆகியவற்றுக்காக பாதீட்டின் ஊடாக நிதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் இடம்பெற்றிருக்கவில்லை. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் நிலவிய நிச்சயமற்ற தன்மையின் அடிப்படையில் அவசர மற்றும் மிகவும் அத்தியாவசியமான கடமைகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்க நேர்ந்தமையால் அந்த பணிகள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பெரும்பாலான பணிகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. | பாதீடு முகாமைத்துவக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 08 செலவின விடயங்களில் 77 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் விலகலொன்று அவதானிக்கப்பட்டது. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக நாட்டில் நிலைமையின் அடிப்படையில் கமநல அபிவிருத்தி நிதியத்திலிருந்து 2020ஆம் ஆண்டுக்காக பாதிடப்பட்ட பணிகள் அவ்வாறே மேற்கொள்ள முடியாதிருந்தமையால் பாதிடப்பட்ட செலவினங்கள் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கு இடையே விலகலொன்று ஏற்பட்டிருந்தது. | பாதீடு முகாமைத்துவக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட வேண்டும். |